நாள்: 09.09.2025
O.S. No. 15 / 2020
பெயர்: செல்வராசு, த/பெ. அய்யாக்கண்ணு
பி.வா.சா.1

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

வழக்கின் விபரங்களை வழக்கறிஞருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்ய யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். வழக்கு சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு வீட்டு வரி ரசீது உண்டா என்றால் இல்லை. வாதி பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்றால் அவர் வாங்கியது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் என்னவென்றால் அதற்கு கதவு எண் எதுவும் இல்லை. வழக்கு சொத்தில் கூறை வீடு உள்ளதா ஆர்.சி.சி வீடு உள்ளதா என்றால் கூறை வீடு உள்ளது. வழக்கு சொத்தில் ஆர்.சி.சி வீடு உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் தார் சாலையும், தெற்கு பக்கத்தில் வாய்க்காலும், மேற்கு பக்கத்தில் சுமதி, தெட்சிணாமூர்த்தி வீடு உள்ளது என்றாலும், கிழக்கில் லலிதா, கணேசன் வீடு உள்ளது என்றாலும் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.68/1 என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் வாதியும் அவரது தாயாரும் குடியிருந்து வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்து உள்ள வீட்டிற்கு அரசால் வாதிக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி குடியிருந்ததன் அடிப்படையில் வாதி பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வந்ததற்கு வீட்டு வரி ரசீதோ அல்லது இதர ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கு சொத்தில் வீடு கட்டவில்லை வீடு கட்ட முயற்சித்தபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. ஏற்கனவே வாதி குடியிருந்து வரும் வீடு உள்ளது என்றாலும் அதை மறைத்து நான் பொய் சாட்சியமளக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயாரின் தந்தையின் பெயர் ஆறுமுக சாம்பான் என்றால் சரிதான். வாதியின் தந்தை தங்கையனின் தகப்பனார் பெயர் ஆறுமுக சாம்பான் என்றால் சரிதான். ஆறுமுக சாம்பானுக்கு ஏற்கனவே வழக்கு சொத்திற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனக்கும் எனது மனைவி பெயரிலும் தான் பட்டா உள்ளது. அந்த பட்டாவானது ஏற்கனவே நிலத்தை வாங்கியதன் அடிப்படையில் கொடுக்கப்பட்ட பட்டாவா அரசால் வழங்கப்பட்ட பட்டாவா என்றால் அரசால் வழங்கப்பட்ட பட்டா ஆகும். அரசு இலவசமாக பட்டா கொடுக்கப்பட்டிருந்தால் அதனுடன் அளிக்கப்பட்டிருக்கும் அனுபந்த உத்தரவினை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் இல்லை. அரசால் வழங்கப்பட்ட பட்டா கொடுத்த ஓராண்டு காலத்திற்குள் வழக்கு சொத்தில் வீடு கட்டி குடியிருந்தேனா என்றால் இல்லை. என்ன காரணத்திற்காக வீடு கட்டவில்லை என்றால் மனைவி இறந்த காரணத்தினால் வீடு கட்ட இயலவில்லை. பட்டா வழங்கப்பட்ட ஓராண்டுக்குள் அனுபவிக்காததால் அது தன்னிச்சையாக செயலிழந்துவிட்டது என்றால் சரியல்ல. அந்த நிபந்தனை

செயல்முறை ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அதே கிராமத்தில் தெற்குத்தெருவில் தனியாக வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு வீட்டு வரி ரசீது மற்றும் மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். மின் இணைப்பு வழங்க அந்த இடத்திற்கு பட்டாவை காண்பிக்க வேண்டும் என்றால் சரிதான் அந்த இடத்திற்கு பட்டா உள்ளது. நான் வீடு கட்டியுள்ள இடமும் அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டாவை தான் வைத்துள்ளேன் என்றாலும் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றாலும் சரிதான். அரசு நிபந்தனையின் படி ஒரே நபருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பட்டா வழங்க இயலாது என்றால் சரிதான். பட்டாவை வழக்கு சொத்தினை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணம் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 1988–ம் ஆண்டு வழங்கப்பட்டது. அந்த தேதி விபரம் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணம் 09.02.2019–ம் ஆண்டு பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் வழக்கு சொத்து காலி மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த சிட்டாவில் எதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு வாதிக்கு வழங்கப்பட்ட பட்டா என்றால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
DN: cn=M S BHARATHIDHASAN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.09.13 10:29:15 +0530